# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2303/08 - 2022 ඔක්තෝබර් මස 26 වැනි බදාදා - 2022.10.26

*2303/08 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**மனு மீதான விளம்பரம்**

*2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 32 மற்றும் 37 (5) ஆகியவற்றுடன் வாசிக்கப்படுகின்ற 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் அடிப்படையில் நீதிமன்ற மேற்பார்வைக்கு அமைவாக த பினான்ஸ் கம்பனி பீஎல்சி என்றழைக்கப்படும் த பினான்ஸ் கம்பனி லிமிடட் (பீ கியூ 1) ஒடுக்கப்படுதல்*

**அதனடிப்படையில், நிதித்தொழில் சட்டத்தின் பிரிவு 37(5) இன் வெளிப்படையான ஏற்பாடுகளுக்கமைவாக,**

மேலே பெயர்க்குறிக்கப்பட்ட கம்பனியை கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கு அமைவாக ஒடுக்குவதற்கான மனு, ஜயகொடி ஆராச்சிகே டொன் சமன் ஜயநாத் நாணயக்கார, முன்னாள் பணிப்பாளர், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, கொழும்பு 1 அவர்களால், சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் 2021, பெப்புருவரி 16 ஆந் திகதியன்று முன்வைக்கப்பட்டமைக்கான அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது. மற்றும் சொல்லப்பட்ட மனுவானது, 2022, திசெம்பர் 08 ஆந் திகதியன்று நீதிமன்றத்தில் கேட்கப்படுவதற்காக பணிக்கப்பட்டுள்ளது; மற்றும் சொல்லப்பட்ட மனுவின் மீதான கட்டளையொன்று ஆக்கப்படுவதை ஆதரிக்க அல்லது எதிர்க்க விரும்புகின்ற சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் அந்நோக்கத்துக்காக, நேரடியாகவோ அல்லது தனது சட்ட ஆலோசகர் அல்லது சட்டத்தரணி மூலமாகவோ, கேட்கப்படும் நேரத்தில் தோன்றலாம்; மற்றும் மனுவின் பிரதியொன்றைக் கோருகின்ற சொல்லப்பட்ட கம்பனியின் எவரேனும் கடன்தருநருக்கு அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு கீழே கையொப்பமிட்டவரால் மனுவின் பிரதியொன்று குறித்துரைக்கப்பட்ட அதற்கான கொடுப்பனவைச் செலுத்துவதன் மீது வழங்கப்படும்.

பணிப்பாளர்,
வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களம்.

இலங்கை மத்திய வங்கி,
இல. 30, சனாதிபதி மாத்தை,
கொழும்பு 1.


1A - G 37866 — 26 (2022/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**குறிப்பு:** சொல்லப்பட்ட மனு கேட்கப்படுதன் மீது தோன்றுவதற்கு எண்ணமுள்ள எவரேனும் நபர் அவ்வாறு செய்வதற்கான எண்ணத்தின் எழுத்திலான அறிவித்தலை மேலே குறிப்பிடப்பட்ட வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை திணைக்களத்தின் பணிப்பாளருக்குச் சேர்ப்பித்தல் வேண்டும் அல்லது தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அறிவித்தலானது நபரின் பெயர் மற்றும் முகவரியினை, அல்லது, குழுமம் எனின், குழுமத்தின் பெயர் மற்றும் முகவரியினை கூறுதல் வேண்டும், மற்றும் நபரால் அல்லது குழுமத்தினால், அல்லது அவருடைய அல்லது அவர்களுடைய சட்டத்தரணியினால் (எவரேனும் இருப்பின்) 2022, திசெம்பர் 06 ஆந் திகதியன்று பிற்பகல் 6.00 மணிக்கு முன்பாகச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும், அல்லது தபால் மூலம் எனின், மேலே குறிப்பிடப்பட்டவரை அடைவதற்கு போதுமான காலத்தில் அனுப்பப்படுதல் வேண்டும்.

EOG *10 -0230*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.